**<u>HMOP No.85/2019</u>**

**<u>Date : 09.06.2022</u>**

<u>*ம.சா.1 ரமேஷ்*</u>

<u>*எ.த.கு.வி*</u>

எனக்கும், எதிர்மனுதாருக்கும் காதல் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். எனக்கும், எதிர்மனுதாருக்கும் 2004ஆம் ஆண்டு கேரளாவில் குலச்சிகரா கிராமத்தில் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். அது ஒரு எஸ்டேட் ஆகும். திருமண சமயம் என்னுடைய பெற்றோருக்கு எங்கள் திருமணத்தின் மீது விருப்பம் இல்லை என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னர் எதிர்மனுதார் கர்ப்பமானவுடன் அவரை அவரது பெற்றோர் வீட்டில் கொண்டு விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. எனக்கும், எதிர்மனுதாருக்கும் சத்தியசீலன் என்ற மகன் உள்ளார் என்றால் சரிதான். சத்தியசீலன் 18.12.2005ல் பிறந்தார். சத்தியசீலனுக்கு தற்பொழுது 17 வயது நடைபெறுகிறது. சத்தியசீலன் தற்பொழுது 12ஆம் வகுப்பு படிக்கிறார். 2011 முதல் நான் தொடர்ச்சியாக கேரளாவில் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். 2011 முதல் நான் கேரளாவில் உள்ள பொன்முடி எஸ்டேட்டில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். 2011 ஆம் ஆண்டு முதல் எதிர்மனுதார் சேர்ந்தமரத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எதிர்மனுதாரை நான் பணி செய்யும் இடத்திற்கு அழைத்து செல்லவில்லை என்றால் சரிதான். நான் அழைத்தும் அவர் வரவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ளது நான் தான். அந்த புகைப்படம் **எ.ம.சா.ஆ.1** ஆகும். எ.ம.சா.ஆ.1 புகைப்படத்தில் உள்ள பச்சை நிற சுடிதார் அணிந்துள்ள பெண்மணி நான் பணி செய்யும் இடத்தில் உள்ளவர். அவர் பெயர் சுபியா ஆகும். எ.ம.சா.ஆ.1 புகைப்படத்தில் உள்ள பெண் குழந்தை சுபியாவின் குழந்தை ஆகும். எ.ம.சா.ஆ.1 புகைப்படத்தில் உள்ள மற்ற இருவர் சுபியாவின் பெற்றோர் என்றால் சரிதான். 20.02.2020ல் நான் எ.ம.சா.ஆ.1 புகைப்படத்தில் உள்ள சுபியாவை 2வது திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. ஆனால் நானும், எ.ம.சா.ஆ.1 புகைப்படத்தில் உள்ள சுபியாவும் 2020ஆம் ஆண்டு முதல் கணவன் மனைவியாக சேர்ந்து வாழ்ந்து வருகிறோம். சுபியாவிற்கும், அவரது கணவருக்கும் விவாகரத்து

ஆகிவிட்டது. சுபியாவிற்கு 27.04.2022ல் ஆண் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். சுபியாவிற்கு 27.04.2022ல் ஆண் குழந்தை பிறந்தது எனக்கு தெரியும். அந்த குழந்தைக்கு நான் தான் தகப்பனார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் 28.05.2022 தேதிய பிறப்பு சான்றிதழ் எனக்கும், சுபியாவிற்கும் பிறந்த ஆண் குழந்தைக்கானது தான். அது **எ.ம.சா.ஆ.2** ஆகும். எனக்கும், சுபியாவிற்கும் 27.04.2022ல் பிறந்த ஆண் குழந்தைக்கு பெர்டீன் என்று பெயர் வைத்துள்ளோம். எ.ம.சா.ஆ.2 பிறப்பு சான்றில் குழந்தையின் தகப்பனார் என்ற இடத்தில் என்னுடைய பெயர் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.2ல் சுபியா என்னுடைய மனைவி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**வேண்டுக்கோளுங்கிணங்க கு.வி. தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**